காஞ்சி

நாடு



தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை 600 008.

ACL-TNAL 03317

2373

JL m211KN, N92 N93-1-10 166895

''ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்

உதையப்ப ராகிவிட்டால் ஓர் நொடிக்குள்

ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி

ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ''

—புரட்சி கவிஞர்

சிறப்பாசிரியர்:

டாக்டர். சி. என். ஏ. பரிமளம்.

பகுத்தறிவுக் கவிஞன்

பாரதிதாசன் அவர்கள் புரட்சிகரமான கருத்துக்களை வெளிப் படுத்திய முதல் கவியும் கடைசிக் கவிஞரும் ஆவார். அவருக்கு அடுத்து அவருக்கு ஈடாக வேறு எந்தக் கவிஞரும் தோன்றவே இல்லை. தோன்றியவர்களும் பழமைக் கருத்துக்களைக் கொண்டவர்கள்தான்.

இன்றைக்கு நம் நாட்டில் இவரோடு குறிப்பிடத்தக்க வேறு புலவர்கள் இருந்தார்கள் என்றோ, இருக்கின்றார்கள் என்றோ சொல்வதற்கு இல்லை.

அவர் புதுமைக் கருத்துக்களையும் புரட்சிக் கருத்துக்களையும் மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து வெளியிட்டுள்ளார்.

சுருங்கச் சொன்னால் அவர் போல் தீவிரமான கருத்துக்களை அவருக்கு முன்பும், பின்பும் எடுத்துச் சொன்னவர்கள் இன்னார் என்று எடுத்துக்காட்ட ஆளே இல்லையே!

—தந்தை பெரியார்

வெற்றி ஓங்குக!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போர் முகாம் அமைத்துவிட்டார்; போர் வீரர்களைக் கூட்டி விட்டார். படைக்கலன்களும் தயார். முரசும் கொட்டிவிட்டுக் கூப்பிடுகிறார்.

'கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே'

என்று அந்தக் குரல், காற்றில் மிதந்து வரும் கீதமாக மட்டும் இன்றி. கிண்கிணிச் சத்தத்தோடு இழைந்து வரும் கீதமொழியாக மட்டுமின்றி, கேட்போரின் வளைந்த முதுகை நிமிர்த்திவிடும் வீரக் குரலாகிவிட்டது எனவேதான், நமக்கொரு வால்டேர் கிடைத்துவிட்டார். நமக்கோர் ஷெல்லி கிடைத்து விட்டார். நமக்கு ஒரு கவிஞர் கிடைத்து விட்டார். அவர் நம்மோடு இருக்கிறார். நமக்காக இருக்கிறார். நம் வேலையைச் செய்கிறார். நாம் வாழ வழி அமைக்கிறார். அவர் வாழ்க, அவர் திறன் ஓங்குக! அவர் வெல்க! அவர் வெற்றியினால் நமக்கு வெற்றி ஓங்குக! என்று மனமார நாம் கூறுகிறோம். நாம் மட்டுமா, நாடே கூறுகிறது.

—பேரறிஞர் அண்ணா

8325

காஞ்சி நாடு

மலர்—1 7—5—1993 இதழ்—10

திருவள்ளுவர் ஆண்டு 2024 மேழம் (சித்திரை)

புதியதோர் உலகம் செய்வோம்

கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

மே தினம்

மேதினி எங்கும் மே தினம் கொண்டாடும் இந்நாளில் அறிஞர் அண்ணாவின் மேதின முழக்கத்தின் தொடக்கத்தை இங்கே தருகிறோம்.

வைகாசியில் கருடசேர்வை
ஆனியில் திருமஞ்சனம்
ஆடியில் பூர உற்சவம்
ஆவணியில் அவிட்டம்
புரட்டாசியில் சனிக்கிழமை உற்சவம்
ஐப்பசியில் தீபாவளி
கார்த்திகையில் தீப விழா
மார்கழியில் திருவாதிரை
தையில் பூசம்
மாசியில் மகம்
பங்குனியில் உத்திரம்
சித்திரையில் பௌர்ணமி

இப்படி தலைமுறை தலைமுறையாக பழக்கப்பட்ட நம் மக்களிடையே மேதின விழா கொண்டாட முற்பட்டிருக்கிறோம்.

'மேதினம்' மேடைப் பேச்சு

166895
7—5—93
92
211KN, N92
N93.1.10

காஞ்சி நாடு

செய்திகள்

சென்னை

8—3—93 அன்று காலை 10 மணிக்கு சென்னை சீமாட்டி வெலிங்டன் பள்ளியில் மாணவ மாணவியருக்கான அண்ணா பற்றி பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி நடைபெற்றது. பேச்சுப் போட்டிக்கு தலைப்பு 'அண்ணா வழி' கட்டுரைப் போட்டிக்கு தலைப்பு 'அண்ணா வளர்த்த அழகு தமிழ்' பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற வர்கள் முதற்பரிசு. S. லாவண்யா பெண்டிங் உயர்நிலைப்பள்ளி சென்னை இரண்டாம் பரிசு. S. மீரா லிட்டில் பிளவர் பள்ளி சென்னை. மூன்றாம் பரிசு. M. நீலாவதி அரசு உயர்நிலைப்பள்ளி, சென்னை. கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் முதற்பரிசு. பிரசில்லா பெண்டிக் உயர்நிலைப்பள்ளி, இரண்டாம் பரிசு: ஆனந்தலட்சுமி, பெண்டிக் உயர்நிலைப்பள்ளி. மூன்றாம் பரிசு: தாமரைச் செல்வன் லிட்டில் பிளவர் பள்ளி போட்டியில் கலந்து கொண்ட 50க்கும் மேற் பட்ட மாணவ மாணவியருக்கு ஆறுதல் பரிசாக ஒவ்வொருவருக்கும் ஓர் புத்தகம் அளிக்கப்பட்டது.

பேச்சுப் போட்டிக்கு நடுவர்களாக திரு. இராசகோபாலன். திரு. அன்பு பழம் நீ. ஆகியோர் கலந்து கொண்டனர், கட்டு ரைப் போட்டிக்கு நடுவர்களாக சீமாட்டி வெலிங்டன் பள்ளி ஆசிரியைகளும், தலைமை ஆசிரியை செல்வி. சரோஜா அவர்களும் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

சிதம்பரம்

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் தென் ஆற்காடு மாவட்டக் கிளை சிதம்பரத்தில் கடந்த 14—3—93 அன்று மாலை 5

மணிக்கு அண்ணா பற்றிய சொற்பொழிவை நடத்தியது. கூட்டத்திற்கு மாவட்ட பேரவை புரவலர். பேராசிரியர் டாக்டர். ச. மெய்யப்பனார் தலைமையேற்றார். தென் ஆற்காடு மாவட்ட பேரவைசெயலர் சிதம்பரம் மயில்வாகனன் M.A.Phd., வரவேற்றார். தஞ்சை மாவட்ட பேரவைச் செயலர் பேராசிரியர். அ.கி' மூர்த்தி M.A.B T., அண்ணாவின் மேடைத்தமிழ் என்கின்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார். அவருடைய பொழிவு நமது அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வரும். திரு இரத்தினமணி M.A BEd., நன்றி கூறினார்.

11—4—93 அன்று பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் சிதம்பரம் கிளை சிதம்பரம் ஆறுமுக நாவலர் பள்ளியில் அண்ணா பற்றி சொற்பொழிவு நடத்தியது. பேராசிரியர் டாக்டர். ச. மெய்யப்பன் அவர்கள் தலைமையில் திரு. சிதம்ரம் மயில்வாகனன் வரவேற்புரையாற்றி டாக்டர். கு. விவேகாநந்தன் M.A.Phd., 'அண்ணாவின்' கடிதங்கள் எனும் தலைப்பில் பேசினார். திரு. இரத்தினமணி அவர்கள் நன்றி கூற விழா முடிவுற்றது. 9—5—93 அன்று திரையுலகில் அண்ணா எனும் தலைப்பில் மூன்னாள் அமைச்சர் திரு.க.பொன்முடி சொற்பொழிவு ஆற்றுவார் என அறிவிக்கப்பட்டது

குமாரசுப்பிரமணியம்
தலைமை நிர்வாகக்குழு உறுப்பினர்
திட்டப் பொருளாளர்
தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம்
கீழப்பாவூர்-627806. நெல்லை மாவட்டம்.
துணைச் செயலாளர், நெல்லை மாவட்ட
அண்ணா இலக்கியப் பேரவை.

கீழப்பாவூர்
10-4-1993

பேரன்பிற்குரிய சகோதரர் டாக்டர். பரிமளம் அவர்களுக்கு வணக்கம் நலம். நலமே பெரிதும் விழைகிறேன்.

கடந்த 29-3-93 திங்கள்கிழமை காலை பாளையங்கோட்டையில் நடந்த என் மகள் செல்வி அங்கையற்கண்ணி - செல்வன் பன்னீர் செல்வம் ஆகியோரது திருமணத்திற்கு தாங்கள் அனுப்பிவைத்த வாழ்த்து கிடைத்தது. பெரிதும் மகிழ்ந்தேன். நன்றி கீழ்க்கண்டவாறு செய்தி காஞ்சி நாடு இதழில் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

செய்தி

நெல்லை மாவட்ட அண்ணா இலக்கியப் பேரவை துணைச் செயலாளரும் தமிழ்நாடு மின் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினருமான திரு. குமார சுப்பிரமணியம் அவர்கள் மகள் செல்வி அங்கையற்கண்ணி-திருச்சி காசாமலை திரு. பாலசுப்பிரமணியப் அவர்கள் மகன் செல்வன் பன்னீர்செல்வம் ஆகியோரது திருமணம் 29-3-93 ஆம் நாள் பாளையங்கோட்டையில் சீர்மிகு D S A. சிவப்பிரகாசம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) தலைமையில் நடைபெற்றது. விழாவுக்கு நெல்லை மாவட்ட அண்ணா இலக்கியப் பேரவை புரவலரும் தி.மு.க. சட்டத்துறை செயலாளருமான திரு. A. L. சுப்பிரமணியம் B.Sc., B L.Ex M L.A. முன்னேற்ற சங்கப் பேரவை இணைப் பொதுச் செயலாளர் திரு. சி. இரத்னசபாபதி த மி தொ மு ச பொதுச் செயலாளர் திரு. இரா. கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். பல்வேறு அமைப்புகளின் சார்பில் சான்றோர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். தமிழகத்தின் அனைத்து பகுதியிலிருந்தும் மின்வாரியத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். திரு. குமாரசுப்பிரமணியம் நன்றி கூற மணவிழா இனிது நிறைவேறியது.

மணமக்கள் எல்லா நலமும் பெற்று அண்ணாவும் தமிழும் போல் பல்லாண்டு வாழ காஞ்சி நாடும் தன் வாழ்த்தை தெரிவித்துக் கொள்கிறது.

பேரறிஞர் அண்ணா இலக்கிய பேரவை

மதுரை மாவட்டம்

அண்ணாவின் நண்பரும், அண்ணாவின் கொள்கைக்கு தன் உயிருள்ளவரை பற்றாளராக இருந்தவரும், பேரறிஞர் அண்ணா இலக்கிய பேரவை புரவலருமான திரு. அன்பின் தர்மலிங்கம் அவர்கள் மறைவிற்கு மதுரை மாவட்ட இலக்கியப் பேரவையின் சார்பாக மிக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

N. பெரியப்பா
மதுரை மாவட்ட அமைப்பாளர்
பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை
7-22, அருள் இல்லம் சொக்கம்பட்டி (கஸ்பா)
மேலூர்-625 06

'நாடு'

ஓர் ஆண்டு நன்கொடை ரூ. 25/-
வாழ்நாள் நன்கொடை ரூ. 250/-

நாடு இதழ் விற்பனையில் எங்களுக்குத் துணை புரியுங்கள் வாழ்நாள் உறுப்பினராகுங்கள்.

தவசி - துறவி

★ பேரறிஞர் அண்ணா ★

விசாலாட்சி
நீலாயதாட்சி
சிவகாமசுந்தரி
குழல்வாய்மொழி
குவளைக்கண்ணி
கோமதி
குமாரி

என்று அம்மைக்கு அஞ்சலிசெலுத்தியும், திரிபுரமெரித்தவிரி சடைக் கடவுளே! என்றும், பாகுகனி மொழி மாது குறமகள் பாதம் வருடிய மணவாளா! என்று முருகனைத் தோத்தரித்தும், 'அருக்கு மங்கையர் மலரடி வருடியும் கருத்தறிந்தபின் அரைதனில் உடைதனை அவிழ்த்தும் ஆங்குள அரசிலை தடவியும் அழியாதே' என்று அறநெறி உரைத்துக் கொண்டும், திருக்கோலம் காட்டியும், அடியார் தரும் காணிக்கையைக் குவித்துக் கொண்டும், கோலோச்சமுடிகிறது. பண்டங்களின் விலை வீழ்ந்தாலும் ஏறினாலும் மேட்டூர் அணையில் நீர் மட்டம் குறைந்தாலும் கூடினாலும், எது பற்றியும் கவலையின்றி இவைகளைப்பற்றி எண்ணி ஏங்கிடச் 'சாமான்யர்கள்' உளர், நாம் சதாசிவத்தின் பூலோகப் பிரதிபிம்பமாகக் காட்சி தருவோம் என்று கூறாமற் கூறிக் கொலுவீற்றிருக்க, அவரால் முடிகிறது. துறவி! எனவே அவருக்கு எதுவும் துரும்பு! வாழ்க்கை கரும்புபோல் இனிக்கும்போது ஏன் அவர் ஏழையர் உலகுக்கு வந்துற்றிடும் இடர்ப்பாடுகள்பற்றி ஏக்கம் கொள்ளப் போகிறார்! விடை ஏறும் எம்மான் அவருக்கு அளித்துள்ளபதவி இருக்கும்போது பஞ்சமும் பட்டினியும், பசியும் கொட்டுவதாலே பதறிப் பரிதவிக்கும் பாமரரின் நிலையிலா அவர் இருக்க வேண்டும்! செச்சே! சிவனருள் சாமான்யமோ! செய்வருக்கும் சில பல மனக்குறை எழக்கூடும்! கோட்டையில் கொடி கட்டி ஆள்வோருக்கும் சிற்சில வேளைகளில் தொல்லையும் துயரமும் தாக்கிடும். இந்தத் துறவிக்கோ, எல்லாம் இன்பமயம்! எங்கும் இன்ப மயம். காலையிலே, மாலையிலே, காகம் கரையும் வேளையிலே மடத்திலே, வேறு இடத்திலே, எங்கும், சிவானுபவம், சுகானுபவம்! துறவிக்கன்றோ கிட்டும் இத்தகைய தேன் சொட்டும் வாழ்க்கை!

தம்பி, துறவிக்குக் கிடைக்கும் இந்த 'இன்ப வாழ்வு பற்றிய எண்ணம். எனக்கு மேலிட்டதால், நான் முன்னாளில் துறவியின் நிலை இருந்த தன்மை பற்றியும், இந்நாளில் துறவி என்பது எத்தகைய பக்குவமான பதவியாக

மாறிவிட்டது என்பது பற்றியும் எண்ணிடலானேன். அரண்மனையில் பிறந்த இளங்கோவும் துறவிதான்! இதோ இன்று அடுப்படி உழன்றோர்கூட துறவிகளாவதன்மூலம், அரண்மனை அந்தஸ்துப் பெறுகிறார்கள்! துறவி இளங்கோ தமிழில் காவியம் இயற்றினார்- சிலம்பு ஒலிக்கிறது! இன்றையத் துறவிகளின் சன்னதியில்,

நூபுரம் கலீர் கலீரென
நேத்திரம் சுரீல் சுரீலென
பாத்திரம் பளா! பளாவென!

தோத்திரங்கள் நடைபெறுகின்றன என்று கேள்விப்படுகிறோம்.

ஒரு வேடிக்கை தெரியுமா, தம்பி! துறவி—தவசி—என்று இரு சொற்கள் கேட்டிருக்கிறோமல்லவா—முன்னது பெரிதும் தமிழகத்துக்கே உரிய தனிப்பண்புக்கு உறைவிடமாகவும், பின்னது ஆரிய கலாச்சாரத்தின் இருப்பிடமாகவுமே, ஆதிநாட்களிலேயே இருந்து வந்திருக்கிறது.

இன்பமான வாழ்க்கையில் இருப்பதற்கான நிலை இருந்து, அதனைத்துறந்திடும்பெரியோன், துறவி! அத்தகைய துறவிகளைத் தமிழகம் அந்நாளில் கண்டது. கொலுமண்டபத்தில் வீற்றிருக்கும் வாய்ப்பும், கோகில மொழியாள் கொஞ்சிட, மஞ்சமதில் மிஞ்சு சுகம் பெறுவதற்கான வசதியும் நிரம்ப இருந்ததைத் துறந்தார் இளங்கோ அடிகள்! பட்டுப் பட்டாடையைத் துறந்து, காவி அணிகிறார்! வரி கட்டினாரரா? கப்பப்பணம் தப்பின்றி வந்து சேர்ந்ததா? கரிப்படையில் குறைவேதேனும் உளதோ! வேற்படைத் தலைவனைக் காணோமே, எங்கே?—என்று கேட்டு அரச காரியத்தைக் கவனித்துக்கொண்டிருக்கும் நிலை இருந்தது, இதனைத் துறந்தார், செந்தமிழின் சிறப்பினை விளக்கிடும் சிலம்பு சமைத்தளித்த சீலர். கணிகையர் குலத்துதித்த மணிமேகலை, துறவுக்கோலம் பூண்டு மக்களின் பசிப்பிணிப் போக்கிடப் பாத்திரமேந்தி நின்றதுடன், மக்கள் தம் பவப்பிணி ஒழித்திடும் மார்க்கம் போதித்து வந்தது

அறிவுக்கு ஏற்றதா?

எந்த காலத்து பழக்கமானாலும் சரி, அது இந்தக் காலத்துக்குப் பொருந்துகிறதா? வாழ்க்கைக்கு தேவையானதுதானா? அறிவுக்கு ஏற்றதா? என்றுதான் நாம் பார்த்து பின்பற்ற வேண்டுமே தவிர, அந்தக் காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணை மூடிக்கொண்டு எதையும் அர்த்த மற்றும் பொருத்தமில்லாமலும் பின்பற்றக்கூடாது.

—அறிஞர் அண்ணா.

பற்றிப் படித்துப்பெருமிதம் கொள்கிறோம். துறவு இத்தகைய தூய்மைக்கு நிலைக்களனாக, தொண்டுக்கு வாய்ப்பாக, இருந்தது. எல்லாத் துறையிலும் செம்மை கண்ட நம் நாட்டிலேதான்! ஆனால் ஆரிய பூமியிலோ! தவசிகள் உண்டு! துறவிகளின் எண்ணிக்கையைவிட மிக அதிகம்! துறவிகள் மனிதருள் மனிதராக, ஆனால் மாமனிதராக இருந்து வந்தனர்! ஆரியத் தவசிகளோ, மனிதருள் தெய்வங்களெனக் கருதப்பட்டு வந்தனர். காடு சுற்றியும் கானாற்றின் கீதம் கேட்டு இன்புற்றும், கல்சொல்லும்கவிதையையும் காரிருளைப் போக்கிடும் மதிதரும் அவிபுரையையும் மக்களுக்கு உய்யும் வழி கிடைத்தற்கான அறநெறியையும், அருளினர். தந்தம் நாட்டுத் துறவிகள்! அடி வீழ்ந்து வணங்கிட மன்னர்களும், கேட்டபோது நவநிதி கொட்டித்தரக் காவகரும் ஆடிடும் அணங்குகளும், பாடிடும் பாவையரும், பணிவிடைக்காகப் பட்டுடுத்திப் பார்வையால் கொல்லும் பசுங்கிளிகளும், தேவைஎன்று நமது துறவிகள் கேட்டதில்லை— அந்நாளில்! மலரம்பு பட்டதால் துடித்துக் கிடக்கும் பட்டத்தரசர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியூட்டும் மாமந்திரம் கூறிடும் ஆற்றலற்றவர்கள் நமது துறவிகள்! ஆரியத் தவசிகளோ! பர்ணசாலைகள், ஆற்றோரத்தில் சோலையின் நடுவில் சாலைப் பக்கத்தில் தென்றல் சாமரம் வீச தேமரங்கனி பூங்காவிலிருந்து கிளியும் தாகணவாய்ப்புள்ளும்குயிலும்புறாவும் இசை பயில, மான்கள் துள்ளி திரிய, மன்னர்கள் கைகட்டி, வாய்பொத்தி நின்று, கேட்டதை தர, பணிவிடைப் பெண்கள் புடைசூழ, பத்தினிகளுடன் 'ரசானுபவத்தைப்' பருகி இன்புற்று வாழ்ந்து வந்த ஈசனை மறந்தனரோ எனின், இல்லை, இடையிடையே யாகம், யோகம், உண்டு. வேள்விப் புகை கானகத்தை மணக்காடாக்கும் — தவசியின் பர்ணசாலைகளைச் சிங்கார கூடமாக்கும்! தேவலோக மேனகை தொட்டிட, காமம் துளிர்த்தது ஆஸ்ரமத்திலன்றோ! திலோத்தமையும் ரம்பையும், ஊர்வசியும், மற்ற மற்ற விண்ணுலகத்து ஆடலழகிகளும் ஆட்கொல்லிகளும் அடிக்கடி வந்து, நடைகாட்டி, கனகபந்தினை ஆட்டி, காவி கமண்டலமேந்திகளைப் பம்பரமாக கலகலவெனச் சிரித்து, பொலபொலவெனக் கண்ணீர் உகுத்து, இன்பப் பெருக்கால் ஆஸ்ரமங்களை இந்திராதி தேவர்களும் கண்டு பொறாமைப் படத் தக்கதான புனித ஸ்தலங்களாக்கி உள்ளனர்.

''கோழி கூவிற்று கோகிலமே! ஆறு சென்று அனுஷ்டானாதிகளை முடித்துக்கொண்டு வருகிறேன்! அன்னமே ஏன் எழுந்திருக்கிறாய்! கமண்டலத்தை நான் தேடி எடுத்துக் கொள்கிறேன். ஆயாசம் நிரம்ப இருக்கிறது ஆருயிரே! சற்று நேரம் அயர்ந்து நித்திரை செய்'' என்று கூறிவிட்டு அவர் செல்ல, அவள் கண் அயர்ந்த நிலையில்,

"'அன்னமேசொர்ணமே! கன்னலே மின்னலே! கட்டித் தங்கமே எட்டிப்போகாதே என் இன்பமே!'' என்று மீண்டும் கொஞ்சுமொழி கேட்ட பாவை கேட்டார்க்குக் கேட்டது அருளும் வள்ளல்போல் மனதறிந்து நடந்து கொள்ள அந்த விருந்து உண்ட நிலையில், அவன் ஆஹாஹாரம்! போட, புதுமையா இருக்கிறதே! இது நாள் வரை நான் கண்டறியாத பேரின்ப மாகவன்றோ இது உள து! எண்றெண்ணி, அந்தப் பூவை புளகாங்கிதமடைய, கபடமறிந்த கௌதமன், கல்லாக்கிய, அந்த கட்டழகி அகலிகை கண்ணாயிரம் உடையான் என்று இன்று பாமரர் கொண்டாடும் இந்திரனைக் கூடிச் சுகித்த இடம் தவசியின் ஆஸ்ரம மன்றோ! அங்கம் தங்கம்! ஆடும் முல்லை மூடும் கண்கள்! தேடும் இதழ்! என்றெல்லாம் பரவசப் பட்டுக் கெண்டை அழகும் கொண்டை அழகும், இடையின் பொலிவும் தொடையின் தரமும், அங்கம் ஒவ்வொன்றிலும் பருவ கருவம் பதிந்து கிடக்கும் பான்மை யும் இருத்தலைக் கண்டு துஷ யந்தன் மனமகிழ்ச்சி கொண்டு, மானும், அன்னமும் மிரண்டோட, மலர்கசங்ககனி சிதற, கன்னியர் வெட்கத்தால் கண் பொத்திக் கொண்டு வேறு திக்கு நோக்கி ஓடிட, முடியிடையாளைத் தொட்டி ழுத்து முத்தமிட்டுப் பட்டத்தரசி யாக்குவேன்! கட்டிக் கரும்பே! என் இஷ்டத்தைப் பூர்த்தி செய் என்று கனிமொழிபேசி, கன்னியின் புதுப்பார்வையால் துளைக்கப் பட்ட கட்டுடலின்மீது பட்ட காமன் கணைகள் பொடிபட இன்பம் பெற்று இகத்தில் இதோ பரம் கண்டேன் என்று பூரித்துக் கூறிச் சகுந்தலையை வாரி அணைத்துக் கொண்ட இடம், கணவரின் ஆஸ்ரமம் அல்லவோ!

அத்திரியும் பிறரும் தவசிகளில் குறிப்பிடத்தக்க எவர் பற்றியும் கூறப்பட்டுள்ளபுண்ய காதைகளில் இந்தப் 'புனிதம்' ததும்பிடக் காண்கிறோம். தவசிகள் இருந்த நிலை, பல ஆண்டுக்காலம் பகலென்றும் இரவென்றும் பாரா மல், ஊணும் உறக்கமும்கூட மறந்து தொழில் நடத்திப் பெரும் பொருள் ஈட்டி, இனித் தம்மிடம் குவிந்துள்ள செல்வம், சிதையாது குறையாது என்ற நிலை பிறந்த தும், பாரிசு சென்று, என்னைப்பார் என் அழகைப்பார் கண்ணாலே! என்று இதழால் கூறிடும் இன்ப வல்லிகளுடன் காமக்களியாட்டத் தில் ஈடுபடும் கனவான் போன்று பெரிதும் இருப்பதைக் காணலாம்.

ஆரியத் தவசிகள், ஆசா பாசங்களை விட்டொழித் தவர்களாகவோ, காமக் குரோதாதிகளைச்சுட்டெரித் தவர்களாகவோ, பற்று அற்றவர்களாகவோ காட்டப்பட்டு இல்லை! மாபெரும் போர் பல புரிந்த பிறகு மன்னர்கள் பெறக் கூடிய மதுநிகர் இன்பத்தை இந்தத் தவசிகள் மகேசனுக்கு எம்மிடம் மட்டற்ற அக்கறை உண்டு என்று கூறுவதாலேயே பெற்றனர்! அவர்களுக்கு குலச் சண்டை, குடும்பச்சண்டை, குமாரி

களாய் மூண்டிடும் குத்து வெட்டு, யாருக்கு யார் சீடர், என்பது பற்றிக் கிளம்பிடும் சச்சரவு சமர் யாருடைய அந்தஸ்து பெரியது என்பது பற்றிய அமளி, எல்லாம் உண்டு!! காட்டு ராஜாக்கள் என்று கூறி, அது எத்தகையது என்பதுபற்றி எண்ணிப் பார்த்துக் தெரிந்து கொள்க என்று கூறிடத் தோன்றுகிறது. தம்பி, அவ்வளவு கோலாகலமாக இருந்து வந்தனர் ஆரியத் தவசிகள்! ஆரியத் தவசிகள் துறவிகளல்ல மிகமிக்க கர்விகள் என்பதைத்தான் அவர்பற்றிய சில பல கதைகள் காட்டுகின்றன!

இன்று தமிழகத்தில் உள்ள துறவுகள் இளங்கோ காட்டிய வழியில் செல்கின்றாரில்லை. செல்லும் திறனும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர் தம் நெஞ்சை இன்று ஆட்கொண்டிருப்பது அன்றைய ஆரிய தவசிகளின் முறைதானோ என்று கொள்ளத் தக்க வகையில், காரியம் பல நடைபெற்று மூடி மறைக்கப் பட்டது போக, புடைத்து வெடித்து வெளியே சில தெரிந் திடக் காண்கிறோம். துறவிகள் தவசிகளாகி விட்டனர். தம்பி துறவிகளின் நிலை பற்றிய எண்ணம் குடைந்த நிலையிலிருந்த எனக்கு ஒரு துறவி பற்றிய சிறு ஏடு படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

வயலூரிலிருந்து நெல் வண்டிகள் வந்து விட்டனவா?

கோட்டையூரார் குத்தகைப் பணத்தைக் குறைவின்றி கொடுத்துவிட்டாரோ?

பட்டணபிரவேசத்துக்கு இந்த ஆண்டு செலவு எவ்வளவு என்று புள்ளி போட்டாகிவிட்டதா?

வாழைத் தோட்டதிலே புதிய வாயிற்படி வைத்தாகி விட்டதா?

முல்லைத் தோட்டத்திலே ஊஞ்சல் அமைத்து விட்டார்களா?

சென்னை வழக்கு எந்தக் கட்டத்தில் இருக்கிறது?

கல்கத்தாவில் இருந்து மருந்து பார்சல் இன்று வந்து விட்டதா?

கனகாம்பரம் கலர் ஆடை இன்று வாங்கியாகி விட்டதா?

கை வளைகள் எங்கே? தோடு மேலும் இரண்டு ஜதை வேண்டும் தொங்கட்டம் பார்வையாக இல்லை?

தில்லை வந்ததும் எனக்குச் சொல்லு! கொல்லைப்புற கதவை தாளிட்ட விட வேண்டாம்.

பல்லை காட்டி நிற்கும் பாக்கியத்திற்கு பத்து கொடுத்து தூரத்து.

ஏன் உரத்த குரலில் கத்தி கத்தி என் உறக்கத்தை கெடுக்கிறீர்கள், நால்வரின் பாடல்களை மனதுக்குள் படித்திடச்சொல்லு! இன்றைய துறவிகள் இங்ஙனம் பேசி இருந்திடக் காண்கிறோம்.

4—9—1955

'தம்பிக்கு' கடிதம்

அண்ணாவின் மேடைத்தமிழ்

அ.கி. மூர்த்தி

(செயலர், பேரறிஞர் அண்ணா இலக்கிய பேரவை, தஞ்சாவூர் மற்றும் பதிப்பாசிரியர், அண்ணா பேச்சுக்கள் எழுத்துக்கள்)

1. அறிமுகம்

இலக்கணம் : அண்ணா வளர்த்த அரியத் தமிழ்த் துறைகள் பல, கதை, கவிதை, கடிதம், கட்டுரை, நாடகம், இதழியில் எனப் பலவாகும். அவை அவற்றில் ஒன்றுதான் மேடைத்தமிழ். பேச்சை முதலாகவும் கருவாகவும் கொண்ட அண்ணாவின் தமிழ் 4 மேடைத் தமிழாகும்.

கால எல்லை : அண்ணா மேடைத் தமிழின் கால எல்லை என்ன? 40 ஆண்டுகள் எனலாம். அண்ணா தம் கல்லூரி வாழ்வைத் தொடங்கிய காலம் 1930 நம்மைவிட்டுப் பிறிந்தது 1969. ஆக, 1930—69 வரையுள்ள 40 ஆண்டுக்காலமே அண்ணா மேடைத் தமிழின் காலம் எனலாம்.

கால எல்லைப்பகுதிகள் : இக்கால எல்லையை பின் வருமாறு நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1930—35 : அண்ணாவின் கல்லூரி வாழ்விற்குரிய காலம். இக்காலத்தில் கல்லூரி இலக்கிய மன்றத்தில் பேசிய பேச்சுகளும் வெளியே பொதுமேடையில் பேசிய பேச்சுகளும் அடங்கும். இவை எல்லாம் குறிப்பிட்ட பொருளில் பேசப்பட்டவை. எனவே, அவற்றைப் பொருள் வழிப்பேச்சுகள் எனலாம். கல்லூரி நாட்களில் சொற்போர் நடக்கும் பொழுது அண்ணாவை யாராலும் வெல்ல முடியாது என்று அவர் தம் ஆங்கிலப் பேராசிரியர் திரு.ஆர்.கிருஷ்ணமூர்த்தி

இப்போது நான் அமைச்சராகிவிட்ட பிறகு எந்தெந்த கரங்களோ எனக்கு மாலையிடுகின்றன. புதிய கரங்கள் என்பதற்காக அவற்றை பகைத்துக் கொள்ள மாட்டேன். ஏனென்றால் நான் அனைவருக்கும் உரியவன். அனைவரது நல்ல நேசக்கரங்களையும் விரும்புகிறவன். சுபாவத்திலேயே பகைவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளவேண்டும் என்று உளமார நினைப்பவன்......

—அறிஞர் அண்ணா

(மேடைப்பேச்சு—மதுரை—1967)

உரைக்கின்றார். இக்காலப்பேச்சுகளில் அண்ணாவின் கருத்துத் துடிப்பை நாம் காணலாம்,

1936—48 : அண்ணா அவர்கள் தி.க.வில் இருந்த காலம். தந்தை பெரியார் அவர்களின் தளபதியாகவும் போர் வாளாகவும் இருந்து பகுத்தறிவு அடிப்படையில் சீர்திருத்தப் பேச்சுக்கள் பேசிய காலம். ஏனெனில், அப்பொழுது பெரிதாகக் கருதப்பட்டது சமூகச் சீர்திருத்தமே. இக்காலப் பேச்சுகளில் அண்ணாவின் கருந்து வீச்சைக் கொள்கை விளக்கமாக நாம் காணலாம்.

1949—66 : அண்ணா அவர்கள் திமுகவைத் தொடங்கி, அதன் செயலாளராகவும் வழிநடத்துபவராகவும் இருந்த காலம். இக்காலப் பேச்சுகளில் அரசியலுக்கு முதலிடமும் சமுதாயச் சீர்திருத்தத்திற்கு இரண்டாமிடமும் அண்ணா அவர்கள் அளித்தார்கள். அரசியல் வழி ஆட்சி பீடம் ஏறினால்தான், தாம், நிறைவேறற விரும்பும் சமூகச் சீர்திருத்தங்களுக்குச் சட்ட வடிவம் கொடுக்க இயலும் என்று அண்ணா கருதினார், 20 ஆண்டுக் காலத் தீவிரப் பிரச்சாரத்தினால் அதனை சாதித்தும் காட்டினார். 1967 இல் அண்ணா அரசு அமைத்ததை நாம் நன்கறிவோம். இக்காலப் பேச்சுகள் அண்ணாவின் கருத்துப் பொலிவை காட்டுபவை.

1967—1969 : அண்ணா அவர்கள் 6—3—67இல் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். 3—2—69 இல் தம் இன்னுயிர் நீத்தார், இக்கால எல்லை 22 மாதங்கள் 8 நாட்கள். (1967 இல் 9 மாதம் 26 நாட்கள். 1968 இல் 12 மாதங்கள் 1969 இல் 1 மாதம் 2 நாள்) இக்காலத்தில் அவர் பேசிய பேச்சுகள் மிகச்சிறந்த பேச்சுகள்; எண்ணிக்கையிலும் மிகுந்தவை. கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு அனைவரும் ஒப்பக்கூடிய உலகளாவிய கருத்துகளை அண்ணா அவர்கள் பேசிய காலம். இக்காலப் பேச்சுகளில் கருத்து முதிர்ச்சியே முதன்மையாக உள்ளது.

எத்தனைப் பேச்சுகள் ; அண்ணா அவர்களின் கல்லூரிக் காலத்தை விட்டு விட்டு, 1936-1969 வரை பார்ப்போமானால், ஓர் ஆண்டுக்குக் குறைந்தது 30 பேச்சுகள் என்று கொண்டாலும் அவர் 35 ஆண்டுகளில் பேசிய பேச்சுகள் 1050 இது ஒரு தோராயக் கணக்கே. முடிந்த முடிவன்று. நடைமுறைக்கு 1000 என்று வைத்துக் கொள்ளலாம்.

இவற்றில் முதல் பேச்சு எது? சொல்வது கடினம், கிடைப்பதும் கடினம். இருப்பினும், 1930-35 வரை அவர் கல்லூரியிலும் வெளியிலும் பேசிய பேச்சுகளில்தான் இந்த முதல் பேச்சு இருக்கவேண்டும்.

கடைசிப் பேச்சு எது? இதற்கு நமக்குச் சான்றுள்ளது. 14-1-1969 அன்று சென்னையில் தியாகராய நகரில் கலைவாணர் சிலையைத் திறந்து வைத்துப் பேசிய பேச்சே அண்ணாவின் கடைசிப் பேச்சு. தம் பொதுவாழ்விலும் அரசியல் வாழ்விலும் அண்ணா கலந்து கொண்ட கடைசி நிகழ்ச்சியும் இதுவே.

வெளியான பேச்சுகள் : இதுவரை தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டிலும் வெளிவந்த பேச்சுகள் 300 இருக்கலாம். இனி வெளிவர வேண்டியவை 700 இருக்கலாம். இவை எல்லாவற்றையும் (700) திரட்டுவது என்பது முயற்சிக்காமல் இருப்பினும், முயன்றால் குறைந்தது 200 பேச்சுகளுக்கு மேல் திரட்டலாம். இதற்கு விடுதலை குடியரசு முதலிய இதழ்களை நாம் துருவிப் பார்க்கவேண்டும். மாலைமணி, நம்நாடு. முரசொலி முதலியவற்றையும் அலசிப்பார்க்கலாம். அண்ணா அன்பர்களுக்குத் தனி வேண்டுகோள் விடுத்தும் பெறலாம்.
அளவு : அண்ணா பேச்சின் கால அளவின் பேரெல்லை 1 மணி. சிற்றெல்லை 15 நிமிடம் நீண்ட பேச்சுகள் 1 36-1948 இல் குறிப்பிட்ட தலைப்புகளில் பேசிய பிரச்சாரம் பேச்சுகள் எ-டு நாம், தீபரவட்டும், ஏ தாழ்ந்த தமிழகமே திருமணம், பாராட்டு, இரங்கல் தெரிவித்தல் முதலில் நிகழ்ச்சிகளில் பேசியவை குறுகிய பேச்சுகள்,

எத்தமிழ் சிறந்தது : தமிழன் பல்துறைகளையும் பேரறிஞர் அண்ணா வளர்த்துள்ளார்கள், அவர் தொட்டதுறை அனைத்தும் துலங்கிற்று. அவற்றில் எத்துறை சிறந்தது என ஒரு வினா எழலாம். ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு வகையில் சிறந்ததே. பொது மக்களிடத்தில் ஒரு பெரிய விழிப்பையும் தாக்கத்தையும் உண்டாக்கியது மேடைத் தமிழே. இவ்வகையில், அத்தமிழே அண்ணாவின் ஏனைய தமிழ் வகைகளும் சிறந்தது எனலாம்.

(அண்ணன் அ.கி. மூர்த்தி அவர்கள் 14-3-93 அன்று தில்லையில் பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவைச் சார்பில் முனைவரும் பதிப்புச் செம்மலும் அண்ணா பேரவையின் தலைவருமாகிய திரு. சி. மெய்யப்பன் அவர்களின் சீரிய தலைமையில் ஆற்றிய 7ஆம் சொற்பொழிவு தொடர் கட்டுரையாக இவ்விதழிலிந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர்)

அடுத்த இதமில் அண்ணா பேச்சுகள் வகைப்பாடு.

எனக்கு என்னவோ இருபதே நாளில் இந்த மந்திரிப் பதவியில் சலிப்பு ஏற்பட்டு விட்டது. சந்தோசமில்லாத சிரிப்பு. தொடர்பே இல்லாத சிநேகம். சுவையே இல்லாத உரையாடல்கள்.

—அறிஞர் அண்ணா.

தமிழனுக்கு ஓர் செய்தி

கவிஞர் பட்டி சு. செங்குட்டுவன்

தமிழா!
ஒருமைபாட்டின் உயர் வடிவே!
காலையில் எழுவாய்!
ஐந்து மணிக்கே-நாயர் கடையில்
டீ குடி!
ஏழு மணியா
உடுப்பி ஓட்டலில்
உண்டி நிறை!
எட்டு மணியாச்சோ!
மார்வாடி கடையில்
தாலியை
பத்திரப்படுத்து!
சில்லறை கனக்குதா?
ஒன்பது மணிக்கு
சினிமா சந்தையில்
மலையாளக் கழிவில்
வாலிப விருந்தாம்.
பதினோரு மணிக்கு
உன் 'சாயா' வாழ்வை
சாயாவில் சூடேற்று
ஒரு மணியா
ஆந்திர மெஸ்ஸில்
அயிட்டங்களை
தீர்த்துக் கட்டு
பொழுது போகலையோ
போ தியேட்டருக்கு
பெயர் நுழையாத
இந்திப்படத்தில்-இழவுப்படத்தில்
உன்னைத் தொலை.
மீண்டும்...
அமெரிக்கா, ஜப்பான்
அதிசயம் பேசு
இரவா
தள்ளாடித் தள்ளாடி
நடை நடந்து
வீட்டுக்குப் போ!
அடிமையே இதை மட்டும்
கேட்டுவிட்டு படு
உனது மாமன்
மத்திய பிரதேசத்தில்
கல்லுடைக்கிறானாம்
உனது சோதரி
பம்பாயில்
உடல் தேய்கிறாளாம்
கொத்தடிமையாய்
கொத்தடிமையாய்
இங்கே ஒண்ட வந்தவன்
'முதலாளி'
அங்கே உன் சொந்தங்கள்
'கொத்தடிமை'
ஆடிப்பாடு ஆரியன் சுதந்திரம்
அடைந்துவிட்டோமென்று!

இறங்கிய அரசியல்

படித்தவர்கள் அரசியலில் இருந்து ஒதுங்கி இருப்பதனால்தான் கற்றறிவாளர்கள் அரசியலில் கருத்துச் செலுத்தாமையால்தான் யார் யாரோ அரசியலில் ஈடுபட்டு தாம் படித்த அளவுக்கு—தமக்கு தெரிந்ததரத்துக்கு அரசியலை இறக்கி விட்டார்கள்.

—அறிஞர் அண்ணா.

பெண்டிர் எழுச்சி

விடியலை தேடும் பெண்ணினமே
பெண்ணின் எழுச்சியை பெண்ணே மறுத்தால்
விடியல் விடியா கனவாகிவிடும்.
களையை அகற்றுவது போல
பெண்கருவை அகற்றும் பெண்களின் எண்ணிக்கை
நாள்தோறும் அதிகரிக்கும் போது
பெண்களின் எழுச்சியை எதிர்பார்க்கலாமா?
மணம் வீச மலருக்கு உரிமை உண்டு
ஆனால்
நீ இங்கு பெண்ணாய் பிறப்பதற்கு
உரிமை இல்லை என்று
தன் திருமணத்தின் போதே முடிவெடுக்கும்
பெண்கள்.
பெண்களின் எழுச்சியை எதிர்ப்பார்க்கலாமா?
தவறி பிறக்கும் பெண்களும்
முறை தவறி வளர்க்கப்பட்டு
சமுதாயத்தில் உயிருடன் புதைக்கப்பட்டு
இளமை கல்வி அவளிடம் இருந்து பறிக்கப்பட்டு
திருமணம் என்ற நாற்கால் பந்தலில் விற்கப்பட்டு
வரதட்சணை என்ற வரரவாங்கிச்செல்ல,
கொடுமை என்ற மாமியார்
அவள் வாழ்க்கையை நிர்ணயிக்கிறாள்.
பெண்
பெண்ணாலேயே பிறக்கப்பட்டு
பெண்ணின் கையால் மாண்டு போவது
நம் நாட்டின் புதுமையான செய்தி அன்று
எனினும்
பெண்ணின் வளர்ச்சியை
பெண்ணே மறுத்தால்
பெண்ணிற்கு விடிவு காலம் தான் வருமோ?
அவள் விடும் மூச்சை
பெருமூச்சாக்கி விடாமல்
பெண்ணின் எழுச்சிக்காக
போராடுவோம்.

சமூக நீதி

—மு. வயலூர்க்குமரன்—

சமூக நீதி, இடஒதுக்கீடு, மண்டல் கமிஷன் என்ற சொற்றொடர்களெல்லாம் அண்மைக் காலத்தில் நாடாளுமன்றத்லும் சட்டப்பேரவைகளிலும் அரசியல் கட்சிகளின் மேடைகளிலும் அடிக்கடி அடிபடுவதை நாம் காண்கிறோம்-கேட்கிறோம். மண்டல் கமிஷன் என்றால் என்னவென்று புரியாமலே 'நாங்கள் மண்டல் கமிஷனை ஆதரிக்கிறோம் (அல்லது] எதிர்க்கிறோம்'' என்று சுருக்கமாகக் கூறி முடித்துக் கொள்வோரும் உளர்.

சமூக நீதி, இடஒதுக்கீடு என்பவையெல்லாம் தமிழ்நாட்டுக்குப் புதுமையான செய்திகளல்ல. தென்னிந்திய நலவுரிமைச் சங்கம், பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்ற அமைப்புகள் தொடங்கிய காலந் தொட்டே தியாகராயர், டாக்டர் நடேசனார் போன்ற பெரியாரும், அவர்களுக்குப் பின்னாள் தந்தை பெரியார், பேறிஞர் அண்ணா போன்ற தலைவர்களும் இந்த நாட்டில் அடக்கி ஒடுக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த மக்களுக்காக இதே பிரச்சினைகளுக்காகத் தொடர்ந்து போராடி வந்திருக்கின்றார்கள். எனவே, தமிழ் நாட்டு மக்களுக்கு இவை புதுமையான செய்திகளல்ல.

எனினும் மண்டல் கமிஷன் என்பது பற்றிக் கூறும்போது அதற்கு அடிப்படையான சில செய்திகளை நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்.

இந்த நாட்டில் பிறப்பால் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற வேறுபாடுகளை உண்டாக்கிப் பெரும்பான்மையான மக்கள் மீது பல நூற்றாண்டுக்காலமாக ஆதிக்கம் செலுத்தி வந்துள்ள ஒரு சிறிய கூட்டம், பெரும்பான்மை மக்களின் உழைப்பின் பயனைச் சுவைத்துப் பழகிவிட்டது. கல்விக் கூடங்களிலும் ஆட்சி மன்றங்களிலும், அலுவலகங்களிலும் அந்தச் சிறிய கூட்டத்தின் ஆதிக்கமே மேலோங்கிநின்றது இந்த நிலையை மாற்றியமைத்து அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களை முன்னேற்று முகத்தான் தமிழ்நாட்டில் நடைபெற்ற இயக்கங்களின் பயனாக, நீதிக்கட்சி ஆட்சியின்போது வகுப்புவாரி அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இந்த அரசாணையின் பயனாகச் சமூகத்திலுள்ள பல்வேறு தரப்பினருக்கும் அரசுப் பணிகளில் ஓரளவு பங்கேற்கும் வாய்ப்பு நல்கப்பட்டது.

1950-ம் ஆண்டு சனவரித்திங்கள் 26-ம் நாள் இந்திய அரசியற் சட்டம் நடைமுறைக்கு வந்தது அரசியற்சட்ட விதிகளின்படி வகுப்பு

வாரி அரசாணை செல்லாது என்று உயர்சாதிக்காரர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து வெற்றி பெற்றனர். அரசியற் சட்டத்தில் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய விதி செய்யப்பட்டிருந்தது ஆனால், உயர் சாதிக்காரர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடைப்பட்ட நிலையிலிருந்த பிற்படுத்தப்பட்ட மக்களின் நிலை உயர விதி செய்யப்படவில்லை. இந்த அநீதியை எதிர்த்துத் தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் போர்க்கொடி உயர்த்தினர். பெருந்தலைவர் காமராசரும் போராடினார், இந்தத் தலைவர்களின் போராட்டத்திற்கு வெற்றி கிடைத்தது. சமுதாயத்திலும், கல்வியாலும் பிற்பட்டவர்களாக இருக்கும் மக்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யலாம் என்று அரசியற் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது அதன் பின்னரும், தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டது வட மாநிலங்களில் பெரும்பாலானவற்றில் இத்தகைய இட ஒதுக்கீடு இன்றளவும் செய்யப்படவில்லை. மைய அரசிலும் இடஒதுக்கீடு செய்யப்படாமலே இருந்து வருகிறது.

மைய அரசுப் பணிகளிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிய பங்கு கிடைக்க வேண்டுமென்று பல்வேறு அரசியற் கட்சிகளும் சமுதாய இயக்கங்களும் தொடர்ந்து போராடி வலியுறுத்தியதன் காரணமாக மைய அரசு மண்டல் என்பாரின் தலைமையில் ஒரு குழு அமைத்தது. அந்தக்குழு விரிவாக விசாரணைகள் நடத்திப் பல பரிந்துரைகளடங்கிய அறிக்கையொன்றினை 1980-ம் ஆண்டில் மைய அரசுக்கு

என் ஆசை

சர்வாதிகாரமும், கொடுங்கோன்மையும் பூண்டோடு கருவறுக்கப்பட்டாக வேண்டும். பகட்டும், வெற்றுரைகளும் உள்ளொன்று வைத்து புறமொன்றுபேசிடும் பொல்லாங்கும் அழித்திடல் வேண்டும். அப்போதுதான் மனிதத் தன்மை மானுடத்தின் மாண்பு. அரசோச்ச முடியும். இச்சீரிய செயலில் ஈடுபடத்தக்க செயல் வீரர்களை பல்கலை கழகங்கள் ஆண்டுதோறும் பட்டதாரிகளாகத் தயாரித்து அனுப்பிக்கொண்டே இருக்கவேண்டும் என்பதே என் பேராவல்.

—அறிஞர் அண்ணா.

அளித்தது. அந்த அறிக்கை தான் மண்டல் கமிஷன் அறிக்கை என்று அறியப்படுகிறது. அந்த அறிக்கையை வெளியிடாமலே காங்கிரஸ் அரசு 10 ஆண்டுக் காலம் பதுக்கி வைத்தது. தேசிய முன்னணி ஆட்சி வந்த பின்னர்தான் பிரதமர் வி.பி சிங் மண்டல் கமிஷன் அறிக்கையை வெளியிட்டு அதன் பரிந்துறையின் அடிப்படையில் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு மைய அரசுப் பணிகளில் 27 விழுக்காடு ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பித்தார்.

ஆண்டாண்டுக் காலமாக ஆதிக்கம் செலுத்தி வந்தவர்கள் விடு வார்களா? பெருங்கலகம் செய்து அரசாணையைச் செயற்படுத்த விடாமல் தடை செய்தார்கள். நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். இறுதியாக உச்ச நீதிமன்றம் இடஒதுக்கீட்டு ஆணை செல்லுபடியாகு மென்று தீர்ப்பளித்தது. தீர்ப்பில் நீதிமன்றம் வேறு சில கட்டளை களையும் பிறப்பித்துள்ளது. அவை தனியாகக் குறிப்பிடப்பட வேண்டியவை.

இப்போது நம்முள் எழுகின்ற கேள்வி, மண்டல் கமிஷன் பரிந் துரைத்துள்ள 27 விழுக்காடு இட ஒதுக்கீடு என்பதே மக்கள் தொகை யில் 60 விழுக்காடாக உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மிகவும் குறைவாக இருக்கிறபோது, இதையும் தரவிடாமல் தாங்களே எடுத் துக் கொள்ள முனைகிறார்களே முன்னேறிய வகுப்பினர், இது நீதியா? பிற்படுத்தப்பட்ட மக்கள் என்ன பாவம் செய்தார்கள்?

பிற்படுத்தப் பட்ட மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

> 'பிற்படுத்தப்பட்டவர்களென்றால், கல்வி, தொழில், சமூக அந்தஸ்து, பொருளாதாரம், அரசியலிலும் அலுவலகங்களிலும் இடம் எனும் இவைகளிலெல்லாம் பிற்படுத்தப்பட்டு, தாழ்நிலை தரப்பட்டு, கவனிப்பாரற்று, ஒரவஞ்சனையாக நடத்தப்பட்டு, ஒடுக்கப்பட்டு வாழ்பவர்கள் என்பது பொருள்.
>
> உழைக்கவும் அதன் உறுபயனைப் பிறருக்குக் கொட்டி ஏமாறவும், உழைக்கவும் அதன் காரணமாகவே தாழ்நிலையில் தள்ளி வைக்கப்படவும்' உழைக்கவும் அதனாலே கல்வித்துறை யில் முன்னேற, அரசியலில் அந்தஸ்து பெற இயலாமல் உழைத் துக் கிடப்பதற்காகவே படைக்கப் பட்டவர்கள் - போன்றதோர் நிலைபெற்று நொந்து கிடப்பவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப் பினர்.......இந்த வேதனையைத் தலைமுறை தலைமுறையாக, பல நூற்றாண்டுகளாக அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் இன்று பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப் படுகிறார் கள்.''
>
> திராவிட நாடு—12-8-56

இவ்வளவு பரிதாபத்துக் குரியவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். இவர்கள் மீது இரக்கம் வேண்டாமா? கல்வித் துறையிலும் அரசு அலுவல் துறையிலும் இந்த வகுப்பினரின் நிலையென்ன? இதோ, சில புள்ளி விவரங்கள்:

தமிழ்நாடு	பார்ப்பனர்கள்	பிற முற்பட்ட வகுப்பினர்
1901-ம் ஆண்டில்-படிப் பறிவுள்ளவர்களில்	73.6%	6.9%
1901-ம் ஆண்டில் ஆங்கிலப் படிப்பறிவுள்ளவர்களில்	17.9%	0.2%

இதுதவிர, 1870 முதல் 1918 வரையில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்களில் 67% பார்ப்பனர்கள்.

மக்கள் தொகையில் 3 விழுக்காடாக உள்ள பார்ப்பனர்கள் 1918-ம் ஆண்டில் அரசு அலுவலில் கீழ்க்கண்ட விவரப்படி ஆதிக்கம் பெற்றிருந்தார்கள்:

துணைக் கலெக்டர்கள்	—	55%
சார் நிலை நடுவர்கள்	—	83%
மாவட்ட முன்சீபுகள்	—	73%
வருவாய்த்துறையிலும் நீதித்துறையிலிம் பிற உயர் பதவிகளில்	—	65%

மைய அரசில் :

1980-ம் ஆண்டில் மக்கட் தொகையில் 50%க்கு மேல் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அரசுத் துறைகளில் 12.6%-ம் பிற அரசுத் துறை நிறுவனங்களில் 4,7% ம் மட்டுமே இருந்தனர்.

1985-ம் ஆண்டில் ஐ.ஏ.எஸ். பணிகளில் பார்ப்பனர்கள் 37,7%-ப் பிற உயர் வகுப்பினர் 32.2%-ம் இருந்தனர்.

1100 பெரிய நிறுவனங்களில் உயர்பதவிகனில் 43.5% பார்ப்பனர்களும் 51.2% பிய உயர் வகுப்பினரும் இருந்தார்கள்.

(ஆதாரம் : எஸ். குகன் என்பார் 11—12—90 நாளிட்ட 'இந்து' ஏட்டில் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து.

மேற்கூறிய புள்ளி விவரங்களிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் எந்த அளவுக்கு வஞ்சிக்கப்பட்டனர் என்ற உண்மைத் தெளிவாகும்.

தகுதி, திறமை அடிப்படையில் அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டால்தான் அரசு நிர்வாகம் சீராக இயங்கும் என்ற ஒரு வாதத்தை உயர் வகுப்பினர் எடுத்து வைக்கிறார்கள். இதற்கு உச்ச நீதிமன்ற நடுவர் ஓ சின்னப்ப ரெட்டி அவர்கள் கே.சி வி. குமார்—கர்நாடக மாநிலம் என்ற வழக்கில்தாம் எழுதியுள்ள தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு மறுமொழி கூறுகிறார்:

> ''படிப்பதற்குப் புத்தகங்களோ பத்திரிகைகளோ இல்லாத வீடு. அங்கே வானொலியில்லை. தொலைக்காட்சிப் பெட்டிக் கிடையாது. வீட்டுப்பாடங்களைச் செய்வதில் உதவு செய்ய யாருமில்லை. பெற்றோர் படிப்பறிவற்றவர்கள். படிப்புத் தொர்பான விளக்கமோ, பொது அறிவு பற்றிய விவரங்களோ அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்திற்கே அங்கே இடமில்லை இத்தகைய பிற்பட்ட சமுதாயக் குடும்பத்தில் பிறந்த மாணவன் தேர்வுகளில் 50 விழுக்காடு மதிப்பெண் பெறுகிறான் என்று வைத்துக்கொள்வோம் உயர் வகுப்புகளில் பிறந்து செயின்ட் பால்ஸ் உயர் பள்ளியிலும் செயின்ட் ஸ்டீபன் கல்லூரியிலும் பயின்று தேர்வு எழுதுவதற்காகத் தனிப்பயிற்சிகள் பெற்று 80 அலலது 90 விழுக்காடு மதிப்பெண் பெறுகிற மாணவனைவிட முன்னே சொன்ன பிற்பட்ட வகுப்பில் பிறந்து குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவன் தகுதி திறமையில் குறைந்தனவா? இல்லவே இல்லை. எண்ணிலடங்கா இடர்பாடுகளுக்கிடையே கற்றுத் தேர்வு பெறும் மாணவன் உயர் வகுப்பு மாணவனைவிட வாழ்க்கையில் திறமையுடன் செயல்பட முடியும் என உறுதியாகக் கூறமுடியும்''.

எனவே, பல நூற்றாண்டுகளாக வஞ்சிக்கப்பட்டு வருகின்ற பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்குச் சமூக நீதி பெற்றுத் தருவதற்கு நாமெல்லாம் அணி திரள்வோம்! வெற்றி பெறுவோம்!

முறித்தெறியுங்கள்

ஆணவம் அகங்கார அதிகார செல்வச் செருக்கு ஆகியவை எந்த உருவத்தில் ஆதிக்கம் செலுத்தத் தலை தூக்கினாலும் அந்த ஆதிக்கக் கொடுமையை அடக்குமுறைப் பிடியினை அடியோடு முறித்தெரியுங்கள். சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் ஆகிய சமரசக் கருத்தூட்ட வாழ்விற்கு ஆதிக்கவுணர்வு பேரெதிரி என்பதால்

—அறிஞர் அண்ணா.

திரட்டு

பெரியார் திடலில் எழுச்சியுடன் நடந்தது

தில்லை வில்லாளன் 65-வது பிறந்த நாள் விழா

சென்னை, ஏப்ரல் 6—திராவிடர் இயக்க எழுத்தாளர், வழக்கறிஞர் தில்லை வில்லாளனின் 65 ஆவது ஆண்டு பிறந்தநாள் விழா சென்னை பெரியார் திடலில் நடைபெற்றது. அறிஞர் பெருமக்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தில்லை வில்லாளனின் பொதுத் தொண்டினைப் பாராட்டி புகழாரம் சூட்டினர்.

இசை விழா

5-4-9 மாலை 6-30 மணிக்குத் தொடங்கிய நிகழ்ச்சியின் முதலில் தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தின் நூலக இயக்குநர் பத்மநாதனின் கலைவாணி இசைக் குழுவினரின், சிறப்பான இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் பாரதிதாசன் கவிதைகள் உட்பட பல பாடல்களை அண்ணாமலை பல்கலைக் கழக விடுதி மேலாளர் க.பாலு சிறப்பாக பாடினார் - மறைமுதல்வன் சிறப்பாக தபேலா வாசித்தார்.

இசை நிகழ்ச்சிக்குப்பின் தொடங்கிய விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று விழாக்குழுவினுடைய செயலாளரும், கழக தலைமை நிலையச் செயலாளருமான கவிஞர் கலி. பூங்குன்றன் உரை யாற்றினார். நிகழ்ச்சிக்கு நீதியரசர் பெ. வேணுகோபால் தலைமை வகித்து உரையாற்றினார். அவர் தனது உரையில், அண்ணாவின் தம்பிகளில் தலைசிறந்த தம்பியாக விளங்கக்கூடியவர்தான் விழா

நாயகர் தில்லை வில்லாளன். மெழுகுவர்த்தி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கக்கூடியவர்.

அவ்வாறு அவர் மெழுகுவர்த்தி வாழ்க்கை வாழ்வதால்தான் கருப்பு மெழுகுவர்த்திகள் அவருக்கு விழா எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றார்.

விழாவிற்கு அறிஞர் அண்ணாவினுடைய துணைவியார் இராணி அண்ணா முன்னிலை வகித்தார். விழா நாயகர்களாகிய தில்லை வில்லாளனுக்கு கழகப் பொதுச்செயலாளரும், திருமதி வில்லாளனுக்கு இராணி அண்ணாவும் பொன்னாடை அணிவித்தார்கள்.

நூல் வெளியீடு

சட்ட ஞானி தில்லை வில்லாளன் எழுதிய 'Legal Maxims' என்ற ஆங்கில நூலை - நீதியரசர் பி. பாஸ்கரன் வெளியிட, பெரியார் இலவச சட்ட உதவி மய்யத்தின் தலைவரும், கழக சட்டத்துறை செயலாளருமான வழக்கறிஞர் செ. துரைசாமி முதல் நூலினைப் பெற்றுக்கொண்டார்.

வழக்கறிஞர் பி ஜே. ஜமால் முகமது, வழக்கறிஞர் சாமு கழக மத்திய நிர்வாகக் குழுவின் தலைவர் சிதம்பரம் கு கிருட்டிணசாமி, கழகத் துணைப் பொதுச்செயலாளர் கோ. சாமிதுரை, கழக சட்டத் துறை செயலாளர் எஸ். துரைசாமி, சிதம்பரம் பொன். சொக்கலிங்கம், அண்ணா இலக்கியக் கழக நிறுவனர் டாக்டர் சி. என். ஏ. பரிமளம், நீதியரசர் பி. பாஸ்கரன் ஆகியோர், தில்லை வில்லாளனின் பல்வேறு தொண்டறங்களைச் சுட்டிக்காட்டி பாராட்டி உரையாற்றினார்கள்.

பொதுச்செயலாளர்

விழா சிறப்புறவும், விழா நாயகருக்கு வாழ்த்துகள் தெரிவித்தும் வந்திருந்த வாழ்த்து மடல்களை விழாக்குழுவின் பொருளாளர் எம்.டி. கோபாலகிருட்டினன் படித்தார். இறுதியாக விழா நாயகர்களைப் பாராட்டி கழகப் பொதுச்செயலாளர் உரையாற்றினார்.

மாணவர் பருவத்தில் நாம் செய்த பணியை மீண்டும் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. நம்முடைய பணி ஆரம்பப்பள்ளி ஆசிரியர் பணி. எனவே மீண்டும் எழுதுங்கள்; பதிப்புகளை புதுப்பியுங்கள். உடலில் தளர்ச்சி ஏற்பட்டாலும், எழுத்திலும், கொள்கையிலும் தளர்ச்சி ஏற்படாமல், உரமேறிய வளர்ச்சியோடு தொண்டாற்றுங்கள். திராவிடர் பாரம்பரியத்தின் வளர்ச்சி என்று ஒரு கூட்டம்,

விஷமப் பிரச்சாரத்தைச் செய்துகொண்டிருக்கிற காலத்தில் உங்கள் தொண்டு பயன்படவேண்டும்.

பயன்பட வேண்டிய நேரத்தில், பயன்படக்கூடிய இடத்திற்கு வந்திருக்கிறீர்கள். உங்கள் தொண்டு தொடரட்டும்.

இவ்வாறு கழகப் பொதுச்செயலாளர் குறிப்பிட்டார்.

இறுதியாக விழாக்குழு செயலாளர் த. நாகராசன் நன்றி கூறினார்.

விழா நாயகருக்கு சிறப்பு அழைப்பாளர்களும், பேராசிரியர் தி.வ மெய்கண்டார், வழக்கறிஞர் நா. கணபதி சார்பாக வழக்கறிஞர் த. வீரசேகரன், கழக தலைமை நிலைய செயலாளர் ஆனூர் ஜெகதீசன் ஆகியோரும் பொன்னாடைபோர்த்தி பாராட்டினர்.

விழா நாயகருக்கு உடல் நலமில்லாமல் மருத்துவமனையில் இருக்கும் இராம. அரங்கண்ணல் கழகப் பொதுச்செயலாளர் மூலம் தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

பேரறிஞர் அண்ணாவின் 'அப்போதே சொன்னேன்' நாடக அரங்கேற்றம்

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையும், சென்னை வான்மதி கலைமன்றமும் இணைந்து பேரறிஞர் அண்ணாவின் 'அப்போதே சொன்னேன்' எனும் கதையை நாடகமாக்கி 14-03-1993 ஞாயிறு பகல் 2-30 மணிக்கு ராஜா அண்ணாமலை மன்றத்தில் அரங்கேற்றினார்கள்.

அண்ணாவின் கதைக்கு மேடைக்கதை அமைத்து உரையாடல் எழுதி இயக்கியவர் வான்மதி கலைமன்ற நிறுவனத் தலைவர் திரு. குடந்தை குமணன் அவர்கள் நாடகத்தில் பங்கேற்று நடித்தவர்கள். திரு. ஆர் நவநீதகிருஷ்ணன். திரு. எஸ். துரையரசன், திரு. சக்திஜெகன், திரு. ஆர். நிர்மல், திரு. வி. செல்வராஜ், திரு. கே. சுரேஷ்குமார், திரு. கே. ஜி. பொன்னுரங்கம், திரு. ஆர். ராதாகிருஷ்ணன், திருமதி எஸ்.பி. ஸ்ரீமதி, செல்வி கே. ஹேமமாலினி, செல்வி எஸ் ஷர்மிளா, செல்வி எம். வித்தியா ஆகியோர் நடித்தவர்கள் அனைவரும் மிக அருமையாக நடித்தார்கள். பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் சார்பில் நடிகர்களுக்கும், இயக்குநருக்கும் கேடயங்கள் வழங்கப்பட்டன. பேரறிஞர் அண்ணா இலக்கியப்

7—5—93
166895

பேரவை 08-03-1993 அன்று சீமாட்டி வெலிங்டன் பள்ளியில் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அறிஞர் அண்ணாவின் புத்தகங்கள் பரிசுகளாக வழங்கப்பட்டன. வான்மதி கலைமன்றத்தின் சார்பில் ஊனமுற்ற தோழர் ஒருவருக்கு மூன்று சக்கர வண்டி ஒன்று வழங்கப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக காஞ்சீபுரம் வெ சம்பந்தம் அவர்கள் டாக்டர் இரா. சேது, எம் ஏ.பி எச்டி., அரசு கலைக் கல்லூரி, டாக்டர் வி. வரப்பிரசாத் ராவ், இ.அ.ப, நிர்வாகஇயக்குநர் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், திரு. சொரூப சந்திரன், சிறப்புத் தலைவர், பேவரிட் கல்சுரல் அகாடமி, இயக்குநர் திரு. சின்ன மருது, செல்வி சரோசா, தலைமையாசிரியர் சீமாட்டி வெலிங்டன் பள்ளி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விழா தொடக்கத்தில் டாக்டர் சி.என்.ஏ.பரிமளம் வரவேற்புரையாற்றினார். முடிவில் திரு. நாராயணன் பொதுச் செயலாளர், வளர்மதி கலைமன்றம், நன்றிகூறினார். பேவரட் கல்சுரல் அகாடமி, பேரறிஞர் அண்ணாவின் படம் ஒன்றைப் பேரவைக்கு அன்பளிப்பாக அளித்தது. 'பேவரட்' செல்வம் விழா ஏற்பாடுகளை முன்னின்று நடத்தினார்.

தமிழ் நாட்டுப் புரட்சிக் கவி

பாரதியாரின் பாடல்கள் தமிழ் மக்களின் உள்ளத்தில் சுதந்திர உணர்ச்சியை உண்டு பண்ணியது போல, பாரதிதாசனுடைய பாடல்கள் சமூகச் சீர்திருத்த உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டி வருகின்றன என்றால் அது மிகையாகாது. இனிய எளிய நடையிலுள்ள இவரது பாக்கள் படிப்போருக்கு இன்பம் பயக்கும் என்பதில் யாதும் ஐயமில்லை. மதங்களிலும், பழைய ஆசாரங்களிலும் ஊறிக் கிடந்த மக்களிடையே இவருடைய பாடல்கள் ஒரு பெரிய மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கின்றன. ஆதலால் இவர் ஒரு புரட்சிக்கவி. அமெரிக்கப் புரட்சிக்கவி வால்ட் விட்மன். தமிழ்நாட்டுப் புரட்சிக்கவி பாரதிதாசன்.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

சாதி ஒழித்திடல் ஒன்று—நல்ல தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை நாடு மறந்தால்—மற்ற பாதி துலங்குவ தில்லை!

சாதி களைந்திட்ட ஏரி—நல்ல தண்டமிழ் நீரினை ஏற்கும் சாதிப்
பிணிப்பற்ற தோளே—நல்ல தண்டமிழ் வாளினைத் தூக்கும்!

—புரட்சிக் கவிஞர்.

JL
2ıı KN, N92
N93·1·10

அறிஞர் அண்ணாவின் தன்வரலாறு

— Dr. CNA. மரிமளம் —

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு இருபதாண்டு களுக்கு முன்னாலே பரிசளிப்பு நடத்தி, அவரிடத்திலே பணமுடிப்பு கொடுத்தான பிறகு அந்தப் பணமுடிப்பை எடுத்துக் கொண்டு அவரோடு நான், ஒரு குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு திருவல்லிக் கேணியில் அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு போய்க் கொண்டிருந் தோம். அந்த நேரத்தில் எனக்கும் பெரியாருக்கும் ஓரளவுக்குச் சிறு மனத்தாங்கல். அதைப்போலவே பாரதிதாசன் அவர்களுக்கும் பெரியாரிடத்திலே ஓரளவு மனத்தாங்கல் இருந்த நேரம். அந்த இரண்டு சூழ்நிலைக்கு இடையில் பாரதிதாசன் அந்த வண்டியிலே போய்க்கொண்டிருந்த நேரத்தில் என்னிடம் சொன்னார்கள். நீ கொடுத்திருக்கின்ற இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு நாம் தமிழர்களுக்கென்று ஒரு அரசியல் கட்சி தொடங்கலாம். நீயும் நானும் இருந்து நடத்தலாம் என்று என்னிடத்திலே சொன்னார்கள். நான் அவர்களிடத்திலே சொன்னேன் ஐயா! நீங்கள் அரசியலுக்கு வர வேண்டாம். நீங்கள் கவிதை உலகத்திலே நடமாடுங்கள். கவிதை உலகத்திலே நீங்கள் நடமாடுகின்ற உயரத்திற்கு எந்த அரசியல் வாதியும் வரமுடியாது! அரசியல் வாதிகளின் மத்தியில் வந்து இருந்து கொண்டு கவிதை எழுதுவது என்றால் அது அரசியல் கவிதையாகத் தான் இருக்கும். அதற்கு வயது ஆறு மாதமாகத்தான் இருக்கும். ஆகையினாலே நீங்கள் இந்த அரசியல் காரியத்தில் ஈடுபட வேண்டு மென்று கருதாமல், நீங்கள் நாங்கள் கொடுத்திருக்கின்ற இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு இந்தியாவிலே உள்ள பெரிய மலை களுக்கெல்லாம் சென்று வாருங்கள்; நதிகளுக்கெல்லாம் சென்று வாருங்கள்; பொழிலெல்லாம் கண்டு வாருங்கள்; மக்களையெல்லாம் பார்த்து வாருங்கள்; அவைகளையெல்லாம் பார்த்துப் பார்த்து நீங்கள் பெறுகின்ற நல்ல கருத்துகளை கவிதை வடிவத்திலே கொடுங்கள். அதற்குத்தான் இந்த விழா நடந்தது' என்று நான் சொன்னேன். என்னை அரசியலுக்கு வரவேண்டாம் என்று அண்ணாத்துரை தடுத்து விட்டானே என்று அவர்கள் வருத்தப்படமாட்டார்கள். இந்த அரசியலிலே இருந்துகொண்டு நான் படுகின்ற அல்லலை அவர் பார்த்திருப்பாரானால் அவருக்குச் சொன்னதை-அது எவ்வளவு நல்லது என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். ஆனால் அதற்குப் பிறகும் அவர்கள் ''பாண்டியன் பரிசு'' போன்ற பல அரிய ஏடுகளை நமக்குத் தந்து சென்றிருக்கிறார்கள். அவர் கொடுத்திருக்கின்ற கவிதைகளை மேலும் கவிதைகளாக்கித் தருவதற்கு நம்முடைய தம்பி கருணாநிதி போன்றவர்கள் நிரம்ப இருக்கின்றார்கள்.

கல்லூரிகளிலே உள்ள மாணவர்கள் நடத்துகின்ற கையேட்டுப் பிரதிகளை நான் அடிக்கடி பார்க்கிறேன் மாணவர்கள் எவ்வளவு அழகிய முறையில் கவிதை நடையைக் கையாளுகின்றார்கள் என்பதை பார்க்கின்ற நேரத்தில் எனக்கு முப்பது வருடத்திற்கு முன்னாலே இருபத்தைந்து வருடத்திற்கு முன்னாலே நான் என்ன பேசிக்கொண்டிருந்தேனோ அது நினைவிற்கு வருகின்றது ஆனால் பேச இயலவில்லை. ஆனால் இன்றைய தினம் அந்தக் கவிதை நடை கல்லூரி தோறும், உயர்நிலைப்பள்ளி தோறும், தமிழ் உள்ளந்தோறும் நடமிட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகையினால் அப்படிப்பட்ட தமிழ் மொழிக்கு ஒரு நல்ல ஆர்வம் ஏற்பட்டிருக்கின்ற நேரத்தில் தமிழ்ப் பெரியார்களுக்கும், தமிழ் அறிஞர்களுக்கும் படத்திறப்பு விழாக்கள் நடத்துவது, நாம் அவர்களுக்குக் காட்டுகின்ற மரியாதை அன்று. அவர்கள் தம்முடைய எழுத்தின் மூலமாகவே இறவாத மரியாதையைப் பெற்றவர்கள்.

மேடைப் பேச்சு
பச்சையப்பன் கல்லூரி 1968

...ஒரு தலைவன் இடுகின்ற ஆணையாக ஏற்று, அந்தக் கட்டளைக்கு கீழ்படிந்து நடப்பேன் என்பதை இந்த மாநிலமாநாட்டில் நான் உறுதிகூற விரும்புகிறேன். அதில் யாருக்காவது ''அப்படியா? நடப்பாரா? நடக்குமா? என்று சந்தேகம் இருந்தால் பெரியார் ராமசாமியைக் கேட்டுப் பாருங்கள்—'இது வரையும் இனி மேலும் ஒரு தலைவனுக்கு கீழ்படிந்து நடப்பதில் என்னைவிட வேறு யாரும் உண்டா? என்று. உதாரணத்திற்கு நான் ஒன்று கூறுவேன். வடநாட்டில் நான் அவரோடு சுற்றுப்பயணம் செய்தேன். லக்னோ பல்கலைக் கழகத்தில் பெரியார் இராமசாமி அவர்கள் தமிழில் பேசினார். நான் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தான பிறகு அந்த மாணவர் கூட்டத்தில் தலைவராக இருந்தவர் நான் ஒரு M.A. படித்தவன் என்பதை அறிந்து என்னையும் சிறிதுநேரம் ஆங்கிலத்திலேயே பேசுமாறு கூறினார்.

நான் பெரியார் ராமசாமியைத் திரும்பிப் பார்த்தேன்.

பேசாதே என்றார் பேசவில்லை என்றேன். மறுபடியும் அவர்கள் வற்புறுத்தினார்கள்—இவரைக் கேட்டேன்—'இல்லை பேசாதே' என்றார். மூன்றாம் முறையாக வற்புறுத்தினார்கள். மூன்றா முறை பெரியார் என்னிடம் சொன்னார்—''நான் பேசுவதற்கு வரவில்லை. பெரியாரின் பேச்சை மொழி பெயர்க்கத்தான் வந்தேன் என்று அவர்களிடம் எடுத்துச் சொல்லு!'' என்றார். நான் எடுத்துச் சொன்னேன். எதனால்? அவ்வளவு அடக்க ஒடுக்கமாக பெரியா

ரிடம் நடந்து கொண்டேன். நான்தான் கடைசி ஆள்—அவ்வளவு அடக்க ஒடுக்கமானவன்—அவருக்கு கிடைத்தவன்

1956 தி. மு க. மாநில மாநாடு உரை.

DVN

கலைத்தாய் எனக்களித்த முதல் புதல்வன் நடிகமணி டி.வி நாராயணசாமி, புராண நாடகங்களிலே நடிக்க மறுத்து சமுதாய சீர்திருத்த நாடகங்களிலே என்னுடன் நடிக்க வந்த டி. வி. நாராயண சாமி, மாசு மறுவற்ற மாணிக்கம்! மனமயக்கமற்றவர்? ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிக்கவர்! 1944ம் ஆண்டு டி.கே.எஸ். நாடக மன்றத்தி லிருந்து கொள்கை காரணமாக விலகிவந்து என்னோடு சேர்ந்தபோது, 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' என்ற நாடகத்தை நண்பர் நாராயண சாமிக்காகவே நான் எழுதினேன். அதில் தளபதி சந்திரமோகன் வேடத்திலே டி.வி என். அவர்களும், காசி வாசிகாகப்பட்டராக நானும் நடித்தோம்.

அந்த நாடகம் சென்னையில் அரங்கேற்றப்பட்டபோதுதான், நண்பர் கணேசனை—சிவாஜியாக நடிப்பதற்கு தயார் செய்து-வெறும் கணேசனாக இருந்தவரை 'சிவாஜி கணேசனாக' விளங்கும்படி செய்த பெருமை நண்பர் நாராயணசாமியையே சேரும்...தனக்கென்று இவர் என்னிடம் எதுவும் கேட்டதில்லை......

அவருடைய ஆர்வமும் கொள்கைத் துடிப்புத்தான் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, புரட்சி நடிகர் எம்.ஜி. ராமச்சந்திரன் இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன் போன்ற கலை உலகத் தங்கங்களை நமது இயக்கத்தின்பால் நல்ல ஈடுபாடு கொள்ளச் செய்தது.

இவர்களையெல்லாம் அவ்வப்போது அறிமுகம் செய்து வைத்து. என்னிடம் கொண்டு வந்து சேர்த்த பெருமை, நண்பர் நாராயண சாமிக்கே உரியதாகும்

திருநெல்வேலி 1962 நகராட்சி பொருட்காட்சி கலை அரங்கில்.

KRR

தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவு பாசறையிலே சேர்ந்து அவருடைய எழுச்சியூட்டும் இலட்சியங்களை பரப்பும் எழுத்தாளனாக,

பேச்சாளனாக இருந்து வந்த என்னை முதன் முதல் கலையுலகம் பற்றியும் சிந்திக்கத் தூண்டியவர் நடிகமணி D V N அந்த கலையார் வம் கருகிய மொட்டாகி விடாமல் காய்த்திடவும் கனிந்திடவும் இன்று எனக்கு ஊக்கமூட்டுபவர் உதவி வருபவர் என் இனிய நண்பர் K R R (நடிப்பிசைப்புலவர் K. R. ராமசாமி.) எல்லாவற்றையும்விட அவர் ஓர் இரக்கச் சுனை; ஈகை மழை! தனிபட்ட முறையில் இன்று என் பொருளாதாரக் கவலைகளுக்கு அவர் ஓர் சுமைதாங்கி!

அவரது கலைப்பயணம் நாடக மேடையோடு நிற்காது. பட உலகிலும் தொடரும், சுடர்வீசும் என்பது உறுதி!

தஞ்சை ராமநாதன் சபையரங்கில் 1945ல் 'ஓர் இரவு' நாடக விழாவில் அண்ணா.

மதுரை முத்து

நான் திராவிடர் கழகத்திலும், பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திலும் ஈடுபாடு கொண்டு பணியாற்றத் தொடங்கிய காலந் தொட்டு. இதுவரை 'யாருக்கும் கட்டுப்படாதவர்' என்று கூறப்பட்ட முத்து அவர்கள் எனக்குத்தான் கட்டுப்படுவார்......

அந்த நேரத்தில் இருபது இருபத்திரண்டு ஆண்டுகளுக்குமுன் என் நினைவு செல்கிறது.

அப்போது பெரியாரும் நானும் மதுரைக்குச் சென்றோம்—பெரிய மனிதர்களின் அழைப்பை ஏற்று - முத்து அவர்களின் அழைப்பை பெற்று அல்ல! மதுரை புகைவண்டி சந்திப்பில் இறங்கி பெட்டி படுக்கைகளுடன் நின்றோம். எந்த குதிரை வண்டிக்காரரும் எங்களை ஏற்றிச் செல்ல முன்வரவில்லை. ஒவ்வொரு வண்டிக்காரனையும் அணுகி கேட்டுப் பார்த்தோம். 'உங்களை ஏற்றிக்கொள்ள மாட்டோம்' என்று அவர்கள் கூறிவிட்டார்கள்.

இப்படி ஒரு மணி நேரம் இரயிலடியிலேயே நின்று கொண் டிருந்தோம். அன்னாளில் மதுரையில் இருந்த குதிரை வண்டிக்காரர் களையெல்லாம் ஒன்று சேர்த்து, சங்கத்தை உருவாக்கி அந்தச் சங்கத்துக்கு தலைவராக ஒரு மாற்றுக் கட்சி பெரியவர் இருந்தார். அந்தத் தலைவர் எல்லா வண்டிக்காரர்களையும் முன்கூட்டியே அழைத்து எங்களை ஏற்றிச் செல்லக்கூடாது என்று கட்டளையிட் டிருந்தார் என்பதைப் பிறகு அறிந்து கொண்டோம்.......

'நம் நாடு' 22-3-1965

'தொடரும்'

மடல்கள்

அய்யா, 'காஞ்சி நாடு' இதழ் கண்டேன். பெருமைப்படுகிறேன், பணி சிறக்க நல்வாழ்த்துக்கள்.

ஆத்தி நாட்டார்
பெருவனப்பூர்-கல்லக்குடி.

மதிப்புக்குரிய ஆசிரியருக்கு வணக்கம்

தங்கள் 'காஞ்சி நாடு' பல்வகையிலும் சிறந்த இலக்கிய சேவை யாற்றித் தமிழ்த் தொண்டு புரிந்து வருகிறது. பேரறிஞரின் எண்ணங் களை விதைகளாக விதைத்து வருகிறது தங்கள் பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

சு. சசிரேகா
இணையாசிரியர்-மாணவர் தாகம்.

'காஞ்சி நாடு' ஆண்டு கட்டணம் ரூ. 25/-
வாழ்நாள் கட்டணம் ரூ. 250/-

ஆண்டு சந்தாவை புதுப்பித்து விட்டீர்களா? இல்லையேல் உடன் புதுப்பித்து விடுங்கள். நண்பர்களை உறுப்பினராக்குங்கள். இதழை படித்துவிட்டு அருகில் உள்ள நூலகத்திற்கு இலவசமாக கொடுத்து விடுங்கள். முகவர்களே. இதழ் விற்ற உடன் பணத்தை அனுப்பி இதழ் தொய்வின்றி நடக்க உதவுங்கள். 'ஆ-ர்'

தமிழ் நாட்டின் பொக்கிஷம்

பாரதிதாசன் ஆவேசக்கவி; அவர் (அழகு) அலங்காரக் கவியல்ல; வெறும் ஜோடிப்பு வேலை செய்பவரல்ல; அகராதியைக் கொண்டு "கவிகட்டும்" மேஸ்திரியல்ல; புன்மைக் கவிதையைக் கண்டு மனம் பொங்கும் 'புலவர்' அல்ல; ஆவேசத்தையும், உணர்ச்சியையும் வெள்ள மாகக் கொட்டும் உயிர்க்கவி பாரதிதாசன் என்பது எனது தாழ்மை யான எண்ணம். அவர் கையாளும் சொற்களின் எழிலையும பசையை யும், விசித்திரத் தன்மையையும் கண்டு அனுபவிப்பவர்கள், நான் சொல்லுவதைஆதரிப்பார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்

பாரதிதாசன் தமிழ் நாட்டின் பொக்கிஷம், அந்தப் பொக்கிஷத் தைத் தமிழர்கள் அனைவரும் போற்றுவார்களாக!

—வ. ராமசாமி [ஐயர்]

பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்!

எனக்குக் குயிலின் பாடலும், மயிலின் ஆடலும், வண்டின் யாழும், அருவியின் முழவும் இனிக்கும், பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்.

—தமிழ்த் தென்றல் திரு. வி. க.

JL 211K9, N93
N93-1-10
சென்னை-600 008.

இயக்குநர், தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

அறிஞர் அண்ணாவின் தன்வரலாறு-10

...ட்டு முறை ஆகாது; மரபுமல்ல என்பதனால் அதை விடுத்
...தும் இன்று இக் கழகமதை நடத்திச் செல்வோர் இம்முறை
...ன்பதால் எழவில்லை வேட்டுமுறை தன்னாலன்றி வேறெ
...தலையும் கிடைக்கப்போமோ என்று, என்று கேட்கும் வீர
...கினர்க்கு குறைவில்லை, அறிவீர் நன்றாய். பாசறைகள்
...ம் பதுங்கிப் போர் செய்தும். வெடிகுண்டுகள், விரைந்து
... வழி நடந்தும் வடவரின்' ஆதிக்கத்தை அழித்தொழிக்க
...மன்று விடுதலைப்போர் வரலாற்று சுவடி காட்டும், சுவை
...திகளை நெஞ்சில் கொண்டு செயல் புரியத் துடிதுடித்து நிற்
... அறவே இல்லையென்று எண்ணற்க—அவர்கள் இன்று
...றை ஆகாது என்று கூறும் எண்ணத்தாரிடம் கழகம் இருக்கட்
...ாட்கள் என்று உள்ளார். எந்நாளில் அவரிடம் கழகம் சேரும்
...க்கூற வல்லோர் அவருமல்ல. உமது ஆணவத்தின் போக்கே
...க விரைவாக கொண்டு வந்து விடக்கூடும். அறப்போரிட்டு
...பெற விழைவோர்கள் கழகத்தை நடத்தும் பொறுப்பிலுள்ளார்
...ண்மையிண் அருமையினை உணராமல் ஆணவத்தால் அடக்கு
...விழ்த்துவிட. அவிழ்த்துவிட அழிவு முறையன்றி வேறொன்று
...ன்று ஆர்தெழுவர் பலலோர்கள் அறிவீர். இன்று வேட்டு
...இல்லை. ஒட்டுமுறை மேற்கொண்டுள்ளோம் என்று அறிவித்
...து நம் கழகம் ஆளவந்தார்க்கு!

அறிஞர் அண்ணா தம்பிக்கு 19—2—61

தமிழ்பற்று பொங்கியெழ!

...ாதிமதக் கொடுமைகளைத் தூள் தூளாக்க, குருட்டுப் பழக்க
...ங்களைத் தகர்த்தெறிய, பகுத்தறிவை விரிவாக்க, தமிழ்பற்றுப்
...ியெழ. பெண்ணடிமை நொறுங்க. பொதுவாக நில, பண,
...ணிகளின் கொடுமையை உணர்த்த சுருங்கச் சொன்னால் முத
...துவச் சீர்திருத்தமான பாடல்களைத் தந்துள்ளார் பாரதிதாசன்
...ும் வணக்கமும்.

—ப ஜீவானந்தம்

...ர் எழுச்சி எனும் கவிதையை எழுதியவர் செல்வி பெட்ரீசியா,
+2 மாணவி—வேலூர்.

நன்கொடை ரூ. 2-00 பதிவு எண்: G6/TN/MS(C)1239

காஞ்சி
நாடு

தரமான அழகிய

வண்ண வண்ண

அச்சு வேலைகளுக்கு

MALAR PRINTERS (OFFSET PRESS)

மலர் அச்சகம்

7, அவின்யு சாலை, சென்னை-34.

தொ. பெ. 827 85 70

ஆசிரியர், வெளியிடுபவர்: மலர்வண்ணன் அண்ணாதுரை
7, அவின்யூ சாலை, சென்னை-34.
அச்சிடுபவர்: C. R. கண்ணன், அண்ணன் அச்சகம், சென்னை-24.

பெறுநர்:
Director
TAMILNADU ARCHIVES
MADRAS-8

விடுநர்:
பேரறிஞர் அண்ணா
இலக்கியப் பேரவை
7. அவின்யு சாலை,
சென்னை-600 034